செ.வெ.எண் . 1114

<u>செய்தி வெளியீடு</u> நாள்:19–12–2010

## சென்னைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் விளையாட்டுத்திறனை அதிகரிக்க 43 உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், இசை ஆர்வத்தை ஊக்குவிக்க 3 இசை ஆசிரியர்களுக்கும் பணி நியமன ஆணைகள் துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (19.12.2010) தலைமைச் செயலகத்தில் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கிய வாழ்வின் முன்னேற்றத்திற்கும், விளையாட்டுகளில் திறம்பட பங்கேற்க செய்யும் வகையில் 43 உடற்கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவிகளின் இசை ஆர்வத்தினை வெளிக்கொணரும் வகையில் சென்னை பள்ளிகளில் 3 இசை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 46 ஆசிரியர்களுக்கும் பணி நியமன ஆணைகளையும், வாழ்த்து கடிதங்களையும் வழங்கி பணி சிறக்க வாழ்த்து தெரிவித்தார்.

### ஆசிரியர்கள் நியமனம்

சென்னை மாநகராட்சியின் கீழ் 121 தொடக்கப்பள்ளிகளும், 96 நடுநிலைப்பள்ளிகளும், 35 உயர்நிலைப்பள்ளிகளும், 32 மேல்நிலைப்பள்ளிகளும் என மொத்தம் 284 பள்ளிகள் இயங்கி வருகின்றன. சென்னைப் பள்ளிகளில் தற்போது 26 உடற்கல்வி ஆசிரியர்களும், 16 இசை ஆசிரியர்களும் பணிபுரிகின்றனர். சென்னை மாநகராட்சி மேயராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இருந்தபோது சென்னை பள்ளிகளில் 2000ஆம் ஆண்டில் 25 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும், 15 இசை ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டன. அதற்கு பின்னர் 10 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது 43 உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் 3 இசை ஆசிரியர்களின் பணியிடங்கள் நிரப்பப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த 43 உடற்கல்வி ஆசிரியர்களில்

26 ஆண்களும், 17 பெண்களும் அடங்குவர். 3 இசை ஆசிரியர்களில், 2 பேர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆவார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 32 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 141 பட்டதாரி ஆசிரியர்கள், 23 இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு 196 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இன்று பணி ஆணை வழங்கப்படும் 46 ஆசிரியர்களையும் சேர்த்து மொத்தம் 242 ஆசிரியர்கள் கடந்த 4 வருடங்களில் சென்னைப் பள்ளிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

<u>கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 10 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்பட்டன</u>

சென்னை மாநகராட்சி பொதுத்துறையின் மூலம் கருணை அடிப்படையில் 1266 பேர்கள் பணிநியமனம் செய்யப்பட்டும், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக 1156 பேர்களும், காலமுறை ஊதிய விகிதத்தில் 2016 பேர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட்டும், பதவி உயர்வின் மூலம் 2435 பேர்களும், 10 ஆண்டு காலத்திற்குமேல் பணிபுரிந்து 2310 தற்காலிக பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். ஆகமொத்தம், கடந்த 4 வருடங்களில் சென்னை மாநகராட்சியில் பல்வேறு நிலைகளில் 9 ஆயிரத்து 183 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, சாதனை புரியப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா, துணை ஆணையர்(கல்வி) திரு.மு.பாலாஜி, இ.ஆ.ப., மன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.நா.இராமலிங்கம், எதிர் கட்சித் தலைவர் திரு.சைதை ப.ரவி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திருமதி கே.ஜானகி ஆகியோர் கலந்துகொண்டனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9